தினகரன்
கோவை 17 மார்ச் 2006
3

# கோத்தகிரியில் யானை உதைத்த பெண் பலி

**கோத்தகிரி,மார்ச்.17:** நீலகிரி மாவட்டம் கோத்தகிரி பங்களா படிகை வக்கனைமரம் என்ற இடத்தை சேர்ந்தவர் ரங்கன். இவரது மனைவி சுசீலா. இவர் தனது தங்கை ராதா என்கிற ராமாக்காளுடன் கடைக்கு வந்து கொண்டு இருந்தார். ஒன்றரை வயது மகன் மனோஜை சுசீலா இடுப்பில் வைத்திருந்தார்.

சாஜ்பாஸ் எஸ்டேட் வழியாக அவர்கள் வந்து கொண்டிருந்தனர். அப்போது காட்டுயானை ஒன்று அவர்களை திடீரென தாக்கியது. சுசீலா குழந்தையுடன் புதரில் விழுந்தார். ராமாக்காளை பந்து போல யானை உதைத்தது. அதில் அவரது இடுப்பு எலும்பு முறிந்தது.

கோவை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட ராமாக்காள் சிகிச்சை பலனின்றி பரிதாபமாக இறந்தார்.

தினமணி கோவை 3

# காட்டு யானை தாக்கி குழந்தை உள்பட 3 பேர் காயம்

**உதகை, மார்ச் 9:** கோத்தகிரி பகுதியில் காட்டு யானை தாக்கி கைக்குழந்தை உள்பட மூவர் படுகாயமடைந்தனர்.

கோத்தகிரி அருகே கொக்கோடு என்ற கிராமத்திலிருந்து கோத்திமுக்கு என்ற இடத்துக்கு புதன்கிழமை காலையில் ராதா (23), அவரது சகோதரி சுசீலா (32) மற்றும் சுசீலாவின் குழந்தை மனோஜ் (ஒன்றரை வயது) ஆகியோர் வந்து கொண்டிருந்தனர். அப்போது திடீரென அவர்களை வழிமறித்த காட்டு யானை, மூவரையும் தாக்கியது. இதில் மூவரும் படுகாயமடைந்தனர். அவர்களது அலறல் சப்தம் கேட்டு அருகிலிருந்து ஓடிவந்தவர்கள் அம்மூவரையும் உடனடியாக கோத்தகிரி மருத்துவமனையில் சேர்த்தனர்.



**கோத்தகிரி, சோலூர்மட்டத்தில் யானையால் தாக்கப்பட்ட சுசீலா மற்றும் ராதா**